DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024

Prosecution Witness - P.W. 8

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. நடராஜன் |
| Father's Name | : | திரு. ஆபிரகாம் |
| Village | : | அண்டுகோடு |
| Taluk | : | விளவங்கோடு |
| Calling | : | - |
| Age | : | 72 |
| Date | : | 23.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>23.09.2025</u>

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் உத்தரங்கோட்டில் தாமசிக்கிறேன். நான் மேல்புறத்தில் செல்வதாஸ் என்பவருக்கு சொந்தமான உரக்கடையில் 5 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். அந்த கடையில் பீரிடான் பொடி, பூச்சிக்கொல்லி மருந்து, உரம் ஆகியவை விற்போம். ஆஜர் எதிரியை தெரியுமா என கேட்டபோது சாட்சி தனக்கு கண் தூரத்திலிருந்து தெரியாது என சொல்கிறார். அதனால் சாட்சியை எதிரி அருகில் அழைத்து சென்று கேட்டபோது அவரை எனக்கு தெரியாது என கூறுகிறார். எதிரி

எங்கள் கடைக்கு வந்தததை நான் பார்த்ததில்லை.

அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருத கோரி, அனுமதிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்) :-</u>**

25.11.2023 அன்று காலை சுமார் 10 மணியளவில் நான் கடையில் இருக்கும்போது ஆஜர் எதிரி ரோஜா செடிக்கு போடுவதற்காக ஒரு கிராம் பீரிடான் பொடி கேட்டார் என்றும், அதற்குண்டான பணத்தை வாங்கி கொண்டு பீரிடான் பொடியை ஒரு பேப்பரில் கட்டி கொடுத்தேன் என்றும், போலீசார் விசாரிக்கும்போது கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு பொருட்கள் விற்கும்போது கடையில் பில் போடும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. ஏதாவது சீட்டு எழுதி கொடுக்கும் பழக்கம் உண்டா என்றால் இல்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.